சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –23.08.2024

ம.சா.1– ராஜபாண்டியன் த/பெ – முனியசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது தகப்பனார் இறந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிறுவயதிலேயே என்னை விட்டு விட்டு சென்று விட்டார். எனது மனுவில் எனது தகப்பனார் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் பொய்யான தகவலை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எனது திருமணத்தில் கலந்து கொண்டார் என்றும், தற்போது சிவகாசியில் வசித்து வருகிறார் என்றும் சொன்னால் தெரியாது. நான் அனாதை இல்லத்தில் தங்கியிருந்தது சம்மந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மனுவில் என் வயது 27 என்றும், எதிர்மனுதாரர் வயது 26 என்றும் சொல்லியுள்னேன் என்றால் சரிதான். எனது பிறந்த தேதி 03.04.1996. எனது மனைவியின் பிறந்த தேதி 12.04.1997 என்று சொன்னால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரின் வயது என்ன என்று தெரியாது. எனது மனுவில் எதிர்மனுதார் அதிக வயதுடையவராக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சிறுவயதிலேயே புகைப்பிடித்தல், மது அருந்தும் பழக்கம் இருந்ததால் தான் என்னை எனது தகப்பனார் விடுதியில் சேர்த்தார் என்றால் சரியல்ல. தேவி என்பவர் மூலமாக எதிர்மனுதாரரை பெண் பார்த்தோம், அதை எனது மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அழகாக இல்லை என்று என் குடும்பத்தினர் சொன்னதாக

எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அழகாக இருப்பதாக என் குடும்பத்திலோ, எதிர்மனுதாரர் குடும்பத்தினர்களோ சொன்னார்களா என்றால் தெரியாது. எதிர்மனுதாரின் கிராமத்திற்கு நான் திருவிழாவிற்கு சென்றேன் என்றால் சரிதான். எந்த திருவிழா, எந்த மாதம் என்று எனது மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நகரத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றால் சரியல்ல. எனது ஊர் பட்டம்புதுாரில் இருந்து, விருதுநகர் சுமார் 12 கிமீ துாரம். எதிர்மனுதாரர் விருதுநகர் மாவட்டம் எல்லையான குக்கிராமத்தினை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது திருமணம் எதிர்மனுதாரின் ஊருக்கு அருகில் வீரக்குடி கரைமுருகன் கோவிலில் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் அசைவ விருந்து உபசரிப்பு எதிர்மனுதார் வீட்டில் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு வந்த நண்பர்களையும், உறவினர்களையும் எதிர்மனுதாரர் குடும்பம் நன்றாக கவனித்தது என்றால் அப்படி இல்லை. திருமண செலவை முழுவதும் எதிர்மனுதாரர் குடும்பத்தினரே ஏற்றுக்கொண்டார்கள் என்றால் திருமண செலவை நானும், விருந்து செலவை எதிர்மனுதாரர் குடும்பமே செய்தது. திருமண செலவு என்றால் வண்டி செலவு, கோவிலில் ஏற்பட்ட செலவும் செய்தேன். திருமணத்திற்கு 15 பவுன் நகை எதிர்மனுதாருக்கு கொடுத்தார்கள். TN67 BV 9349 என்ற இருசக்கர வாகனம் 3 மாதம் கழித்து கொடுத்தார்கள். எனக்கு மேற்படி இருசக்கர வாகனத்தில் செல்லும் போது எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டது என்று எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால்

சரிதான். அது சம்மந்தமாக நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. திருமணத்திற்கு பின்பு நானும், எதிர்மனுதாரும் நல்ல முறையில் குடும்ப நடத்தி எதிர்மனுதார் கருவுற்றிருந்தார் என்று சொன்னால் நல்ல முறையில் குடும்பம் நடத்தவில்லை, ஆனால் எதிர்மனுதாரர் கருவுற்றிருந்தார். குழந்தை பிறந்த தேதி என்ன தேதி என்று தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 24.07.2022ம் தேதி எங்களுக்கு குழந்தை பிறந்தது என்றால் ஞாபகமில்லை. 01.06.2022ம் தேதி எனது தாயாருடன் என் மனைவி சண்டையிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் மேற்படி தேதி ஞாபகமில்லை. 01.06.2022ம் தேதி காலகட்டத்தில் எனது மனைவி 8, 9 மாத கர்ப்பமாக இருந்தார் என்றால் 8, 9 மாத கர்ப்பமாக இருந்த காலத்தில் அவர் ஊருக்கு சென்று விட்டார். எனது மனைவிக்கு எப்போது வளைகாப்பு வைத்தார்கள் என்றால் 7வது மாத கர்ப்ப காலத்தில் வைத்தார்கள். எனக்கு சகோதரி உள்ளார். எனக்கு சகோதரி இருப்பதாக எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும், எதிர்மனுதாருக்கும் சிறு, சிறு சண்டை வந்தால் கூட அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவார் என்றால் அது சம்மந்தமாக ஊர் பெரியவர்களை வைத்து பேச்சு வார்த்தையோ, காவல்நிலையத்தில் புகாரோ அளிக்கவில்லை என்றால் சரிதான். எனது குழந்தை பிறந்ததில் இருந்தே வலிப்பு நோய் இருப்பது எனக்கு தெரியும். இது குறித்து எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணம் முடிந்ததில் இருந்து கடந்த 03.08.2023ல் இருந்து

எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தியதாக எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றும், இது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது குழந்தைக்கு ஏற்பட்ட வலிப்பு நோய்க்கு நான் உடன் இருந்து மருத்துவ சிகிச்சை செய்தேனா என்றால் என் வீட்டில் இருந்த போது அவனுக்கு எந்த உடல்நிலை பாதிப்பும் ஏற்பட்டதில்லை. குழந்தை பிறந்ததில் இருந்து சுமார் 1 வருடமாக எங்கள் வீட்டில் இருந்தனர். என்னை கரூர் அரசு மருத்துவமனை மனநிலை பிரிவில் அனுமதித்தார்கள் என்றால் இல்லை. நான் கரூர் மருத்துவமனையில் மனநிலை பிரிவில் சேர்ந்ததாக எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் மருந்து குடித்தது சம்மந்தமாக சிகிச்சை பெற்றேன், மனநிலை பிரிவில் சேர்க்கவில்லை. தற்போது வரை எனது மனநிலை சம்மந்தமாக எங்காவது சிகிச்சை எடுத்தேனா என்றால் இல்லை. கடந்த ஆகஸ்ட், 2023 ம் வருடம் நான் 2 முறை தற்கொலை முயற்சி எடுத்ததாக எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான் கரூரில் இருந்து விருதுநகர் வந்த பின்னர் எதிர்மனுதாரர் பார்த்தாரா என்றால் இல்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதால் தான் மனநிலை பாதிப்பு ஏற்பட்டு ஒரே மாதத்தில் 2 முறை தற்கொலை முயற்சி செய்தேன் என்றால் இல்லை. எனது ஊருக்கும், எதிர்மனுதாரர் கிராமத்திற்கும் சுமார் 50 கிமீ தூரம் இருக்கும். நான் எதிர்மனுதாரர் சீதனமாக கொண்டு வந்த பொருட்களை வீட்டிற்கு வெளியே போட்டுவிட்டு அதை வீடியோ மற்றும் போட்டோவை

எதிர்மனுதாரின் உறவினர்களுக்கு வாட்ஸ்அப்-ல் அனுப்பினேன் என்றால் சரிதான், அவரது பொருள் தான் முக்கியம் எனது உயிர் முக்கியம் இல்லை என்பதால் அனுப்பினேன். எதிர்மனுதாரர் டிப்ளமோ முடித்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னுடன் வாழ தான் நினைக்கிறார் என்றும், நான் தான் அவரை நிறத்தை கூறி உருவ கேலி செய்து வீட்டை விட்டு வெளியேற்றி பொருட்களை எடுத்தெறிந்தேன் என்றால் சரியல்ல. குழந்தையின் மருத்துவ சிகிச்சைக்காக ஏதாவது பணம் அனுப்பினேனா என்றால் சிகிச்சை பெற்றது தெரியாது. கடந்த 03.09.2023 ம் தேதி மதுரை ராஜாஜி மருத்துவமனையில் எனது மகன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு நான் அங்கு சென்றேன் என்றால் சென்றேன், ஆனால் தேதி ஞாபகமில்லை. நான் மருத்துவமனைக்கு சென்று எதிர்மனுதாரரிடம் பிரச்சனை செய்ததால் செவிலியர் என்னை எச்சரித்து அனுப்பினர் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என் மீது பாசமாக உள்ளார் என்றும், குழந்தையுடன் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றும், நான் தான் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.